# 19.06.2019

மன்றப்பொருள்...1

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுதுபொருட்கள்/பதிவேடுகள் குறைவாக உள்ள காரணத்தினால் மேற்படி பொருட்கள் மாவட்ட கூட்டுறவு அச்சகம், காரைக்குடி அச்சகத்திலிருந்து கொள்முதல் செய்வதற்கு 2019-2020க்கான நடப்பு ஆண்டிற்கான உத்தேச செலவி ரூ. 5,00,000/- (ஐந்து லட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. .

1.அவசர அவசியம் கருதி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று

கொள்முதல் செய்த்தனை மன்றப் பின்னேற்வு வழங்கி அனுமதிக்கலாம்.

2.செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதனநிதி மூலம் செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 148

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சியின் 2018-2019ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு..

மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண். 149

பதிவு செய்யப்பட்டது

மன்றப்பொருள்..3

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் தட்டச்சர் பணியிடம் காலியாக இருந்து வருவதால் அலுவலக பணிகள் பாதிக்காத வண்ணம், கணினியில் தட்டச்சு செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் மூலமாக தட்டச்சு பணி அனுமதி காலமானது மார்ச் 2019 முடிந்து விட்டது. நடப்பு நிதியாண்டு 2019 - 2020-க்கு விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் ஆனால் தற்போது தேர்தல் நன்னடத்தை விதி நடைமுறையில் இருந்து வந்ததால், ஏப்ரல் 2019 மற்றும் மே 2019 மாதத்திற்கும் 2018-2019 ஆண்டு விலைப்புள்ளி விகிதத்தில் பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பும், நடப்பு நிதியாண்டு 2019 - 2020-க்கு கணினியில் தட்டச்சு மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ. 1,30,000/-க்கு அனுமதியும், விலைப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியலுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | க்யூடெல் கம்யூட்டர்ஸ் | எஸ்ஸார் சிஸ்டம்ஸ், | பிரண்ட்ஸ் கம்யூட்டர்ஸ், |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | (ம) டிடிபி சென்டர் நிறுவன விலைப்புள்ளி | தென்காசி நிறுவன விலைப்புள்ளி | செங்கோட்டை நிறுவன விலைப்புள்ளி |
| 1 | நகராட்சி அலுவலகத்தில் கணினியில் தட்டச்சு செய்யும் பணி மேற்கொள்ள(பக்கம் ஒன்றிற்கு விலை விபரம்) | ரூ.9/- (பக்கம் ஒன்றிற்கு) | ரூ.10/- (பக்கம் ஒன்றிற்கு) | ரூ. 11/- (பக்கம் ஒன்றிற்கு) |

அலுவலக்குறிப்பு..

1. ஏப்ரல் 2019 மற்றும் மே 2019 மாதத்திற்கும் 2018-2019 ஆண்டு விலைப்புள்ளி விகிதத்தில் பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.
2. பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் கணினியில் தட்டச்சு செய்வதற்கு பக்கம் ஒன்றிற்கு ரூ. 9/- என்ற விலை விகிதத்தில் குறைந்த பட்ச விலைவிகிதம் வழங்கியுள்ள க்யூடெல் கம்யூட்டர்ஸ் (ம) டிடிபி சென்டர் நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதற்கும், மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண்.150

குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.

மன்றப்பொருள்..4

செங்கோட்டை நகராட்சி பகுதியில் கே.சி.சாலை நீர்த்தேக்க நிலையத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு கூடுதல் பணிகள் (Iron & G.I.Angle with G.I.Sheet மூடி, ஏணி, அளவு மானி மற்றும் மின்சார பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 128 நாள். 23.02.2019ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கீழ்க்கண்ட விபரப்படி 06.03.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியலுக்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கே.சி.சாலை நீர்த்தேக்க நிலையத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு கூடுதல் பணிகள் (Iron & G.I.Angle with G.I.Sheet மூடி, | 1.20 லட்சம் | திரு.எஸ்.சேக்உதுமான் ஹ்க்கிம் | 0.27% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.யு.சேக் அப்துல் காதர் | 1.51% மதிப்பீட்டிற்கு கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏணி, அளவு மானி மற்றும் மின்சார பணிகள் மேற்கொள்ள | | | |

அலுவலக்குறிப்பு..

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக 0.27% மதிப்பீட்டிற்கு குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. எஸ்.சேக் உதுமான் ஹக்கிம் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளிக்கு அவசிய அவசரம் கருதி பணி உத்திரவு வழங்கியதற்ம் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 151**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

மன்றப்பொருள்..5

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு 2019 - 2020-ம் ஆண்டிற்கு தேவையான கிருமிநாசினிகள் (நீற்றிய சுண்ணாம்பு தூள், பிளீச்சிங் பவுடர், பீனாயில்) கொள்முதல் செய்வதற்கும், மேற்படி கிருமிநாசினிகள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்தை வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்க்குறிப்பு..

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 152**

**அனுமதி வழங்கப்பட்டது**

மன்றப்பொருள்..6

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் ஓழுங்குமுறை) சட்டம் 2014 (மத்திய சட்டம் எண். 7/2014) 37-வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள் 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிக்ள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிம்ம் வழங்குதல்) திட்டம் 2015 ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் செங்கோட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018 ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும் அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும் மற்றும் சாலையோர விற்பனையினை

ஒழுங்குபடுத்தவும், செங்கோட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) துணை விதிகள் 2018 ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரைவு துணை விதிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/2016/UPA2 , நாள். 03.09.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மேற்கண்ட வரைவு துணைவிதிகளை சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம் 2014 பிரிவு(3)-ன் படி கீழ்க்கண்டவாறு புனையப்பட்ட வழிமுறைகளை பின்பற்றி அதன் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்வதற்கும் அதற்குரிய செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) மேற்கண்ட தமிழ் மற்றும் ஆங்கிலம் வரைவு துணை விதிகள் குறித்து பொது மக்களிடமிருந்து ஆட்சேபனைகள் மற்றும் கருத்துறைகள் பெரும் பொருட்டு தினசரி நாளிதழில் பிரசுரம் செய்தல்.
2) பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணைகள் மற்றும் கருத்துரைகள் இறுதி செய்தல்.
3) மன்றத்தின் இறுதி ஒப்புதல் பெறுதல் மற்றும் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல்.

அலுவலக குறிப்பு..

1. வரைவு துணை விதிகள் ஒப்புதல் வழங்கலாம்.
2. தமிழ் மற்றும் ஆங்கிலம் வரைவு துணை விதிகள் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்ததற்கும், மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கலாம்.
3. தமிழ் மற்றும் ஆங்கிலம் வரைவு துணை விதிகள் குறித்த அறிவிப்பு தினசரி நாளிதழில் பிரசுரம் செய்வதற்கும் மற்றும் மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்வதற்குரிய செலவினங்கள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.19645/2016/UPA1, நாள். 20.01.2017-ன் படி மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள அரசுமானியத் தொகையிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 153

பதிவு செய்யப்பட்டது.

மன்றப்பொருள்..7

செங்கோட்டை நகராட்சியில் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குத்தகை இனத்திற்கான 2019 - 2020 முதல் 2021 - 2022 முடிய மூன்று ஆண்டிற்கான பொது

ஒப்பந்தப்புள்ளி/ஏலம் 31.05.2019 அன்று கோரப்பட்டு, 19.06.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி நகராட்சி ஆடு அறுக்கும் மனை ஒப்பந்தப்புள்ளி/ஏலம் எவரும் கோர முன்வராத காரணத்தினால் மறு ஒப்பந்தப்புள்ளி/ஏலம் கோர அனுமதிக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி/ஏலத்தாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி/ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிம்ம் | திரு.கு.லெட்சுமணன் த/பெ.குமாரவேல் 19/22, மந்திரம் தெரு கே.சி.ரோடு, செங்கோட்டை | ரூ. 225770/- |
| | | திரு.பி.சுடலைமுத்து த/பெ.பி.ச்சுமணி 1-1-50, கற்குடி மெயின் ரோடு கட்டளைகுடியிருப்பு | ரூ.225720/- |
| 2 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிம்ம் | திரு.கு.லெட்சுமணன் த/பெ.குமாரவேல் 19/22, மந்திரம் தெரு கே.சி.ரோடு, செங்கோட்டை | ரூ.67,550/- |
| | | திரு.பி.சுடலைமுத்து த/பெ.பி.ச்சுமணி 1-1-50, கற்குடி மெயின் ரோடு கட்டளைகுடியிருப்பு | ரூ. 67,000/- |
| 3 | செங்கோட்டை நகராட்சி வாரச்சந்தையில் குத்தகை வசூல் செய்யும் உரிம்ம் | திரு.பி.வி.நடராஜன் த/பெ.வேல்சாமி தலைவனார் 36, சிவனுபாண்டி விலாஸ் ராமசாமி தெரு, செங்கோட்டை | ரூ. 2,85,250/- |
| | | திரு.கு.லெட்சுமணன் த/பெ.குமாரவேல் 19/22, மந்திரம் தெரு கே.சி.ரோடு, செங்கோட்டை | ரூ.284800/- |
| 4 | செங்கோட்டை நகராட்சி தெருக்களில் சிறு வியாபாரிகளிடம் தெருவசூல் செய்யும் உரிம்ம் | திரு.பி.வி.நடராஜன் த/பெ.வேல்சாமி தலைவனார் 36, சிவனுபாண்டி விலாஸ் ராமசாமி தெரு, செங்கோட்டை | ரூ. 75,000/- |

| | | | |
|---|---|---|---|
| | | திரு.கு.லெட்சுமணன்<br>த/பெ.குமாரவேல்<br>19/22, மந்திரம் தெரு<br>கே.சி.ரோடு, செங்கோட்டை | ரூ. 74,800/- |

அலுவலக்குறிப்பு..

1. வரிசை எண். 1ல் உள்ள நகராட்சி பேரூந்து நிலையத்தில் பேரூந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமத்திற்குரிய இனத்தில் இரண்டு ஏலதாரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரவில்லை. இரண்டு ஏலத்தாரர்களில் திரு..கு.லெட்சுமணன் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.2,25,770/- (இரண்டு இலட்சத்து இருபத்தி ஐயாயிரத்து எழுநூற்றி எழுபது) மட்டும் என்பது சென்ற ஆண்டு துறை ரீதியாக வசூல் செய்த தொகை ரூ. 2,37,504/- (இரண்டு இலட்சத்து முப்பத்தி ஏழாயிரத்து ஐநூற்றி நான்கு) ஐ விட ரூ. 11,734/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 2,24,820/- (இரண்டு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து எண்ணூற்றி இருபது) ஐ விட ரூ. 950/- (தொள்ளாயிரத்து ஐம்பது) மட்டும் கூடுதலாகவும் உள்ளது. எனவே, திரு. கு.லெட்சுமணன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையை அங்கீகரித்து அன்னாருக்கு ஏல நிபந்தனைகளின்படி குத்தகை உரிம்ம் வழங்கலாம்.
2. வரிசை எண். 2ல் உள்ள செங்கோட்டை நகராட்சி பேரூந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்குரிய இனத்தில் இரண்டு ஏலதாரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரவில்லை. இரண்டு ஏலத்தாரர்களில் திரு..கு.லெட்சுமணன் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.67,550/- (அறுபத்தி எழாயிரத்து ஐநூற்றி ஐம்பது) மட்டும் என்பது சென்ற ஆண்டு துறை ரீதியாக வசூல் செய்த தொகை ரூ. 82,682/- (எண்பத்தி இரண்டாயிரத்து அறுநூற்றி எண்பத்தி இரண்டு) ஐ விட ரூ. 15132/- (பதினைந்தாயிரத்து நூற்றி முப்பத்திர இரண்டு) குறைவாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 72.468/- (எழுபத்தி இரண்டாயிரத்து நானூற்றி அறுபத்தி எட்டு) ஐ விட ரூ. 4918/- (நான்காயிரத்து தொள்ளாயிரத்து பதினெட்டு) மட்டும் குறைவாகவும் உள்ளது. பலமுறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒருவரும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர முன்வராத்தாலும, அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 116-ல் தற்போது 20 பணியாட்கள் உள்ள நிலையில் துறை ரீதியாக வசூல் செய்திட இயலாத நிலையில் உள்ளதாலும், குறைவான உயர்ந்தபட்ச கேள்வியினை அங்கீகரித்து திரு. கு.லெட்சுமணன் என்பவருக்கு ஏல நிபந்தனைகளின்படி குத்தகை உரிம்ம் வழங்கலாம்.
3. வரிசை எண். 3ல் உள்ள செங்கோட்டை நகராட்சி வாரச்சந்தையில் குத்தகை வசூல் செய்யும் உரிமத்திற்குரிய இனத்தில் இரண்டு ஏலதாரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரவில்லை. இரண்டு ஏலத்தாரர்களில் திரு. பி.வி.நடராஜன் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.2,85,250/- (இரண்டு இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து இருநூற்றி ஐம்பது) மட்டும் என்பது சென்ற

ஆண்டு ஏலத்தொகை ரூ. 2,81,689/- (இரண்டு இலட்சத்து எண்பத்தி ஒன்றாயிரத்து அறுநூற்றி எண்பத்தி ஒன்பது) ஐ விட ரூ. 3561/- (மூன்றாயிரத்து ஐநூற்றி அறுபத்தி ஒன்று) அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 2,68,408/- (இரண்டு இலட்சத்து அறுபத்திஎட்டாயிரத்து நானூற்றி எட்டு) ஐ விட ரூ. 16,842/- (பதினாறாயிரத்து எண்ணூற்றி நாற்பத்தி இரண்டு) மட்டும் கூடுதாலகவும் உள்ளது. எனவே, திரு. பி.வி.நடராஜன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையை அங்கீகரித்து அன்னாருக்கு ஏல நிபந்தனைகளின்படி குத்தகை உரிம்ம் வழங்கலாம்.

4. வரிசை எண். 3ல் உள்ள செங்கோட்டை நகராட்சி தெருக்களில் சிறு வியாபாரிகளிடம் தெருவசூல் செய்யும் உரிமத்திற்குரிய இனத்தில் இரண்டு ஏலதாரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரவில்லை. இரண்டு ஏலத்தாரர்களில் திரு. பி.வி.நடராஜன் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.75,000/- (எழுபத்தி ஐந்தாயிரம்) மட்டும் என்பது சென்ற ஆண்டு ஏலத்தொகை ரூ. 73,868/- (எழுபத்தி மூன்றாயிரத்து எண்ணூற்றி அறுபத்தி எட்டு) ஐ விட ரூ. 1132/- (ஆயிரத்து நூற்றி முப்பத்தி இரண்டு) மட்டும குறைவாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 70,406/- (எழுபதாயிரத்து நானூற்றி ஆறு) ஐ விட ரூ. 4594/- (நான்காயிரத்து ஐநூற்றி தொன்னூற்றி நான்கு) மட்டும் கூடுதாலகவும் உள்ளது. எனவே, திரு. பி.வி.நடராஜன் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையை அங்கீகரித்து அன்னாருக்கு ஏல நிபந்தனைகளின்படி குத்தகை உரிம்ம் வழங்கலாம்.

2.மேற்படி நகராட்சி ஆடு அறுக்கும் மனை ஒப்பந்தப்புள்ளி/ஏலம் எவரும் கோர முன்வராத காரணத்தினால் மறு ஒப்பந்தப்புள்ளி/ஏலம் கோரவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 154

1. வரிசை எண். 1,2,3 மற்றும் 4ல் உள்ள குத்தகை இனங்களுக்கான அதிகபட்ச ஏலக்கேள்வி அங்கீகரிக்கப்பட்டது.
2. அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..8

செங்கோட்டை நகராட்சி குடிநீர் கட்டணம் திருத்துவது தொடர்பாக துணைவிதிகள் வரைவினை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர், சென்னை அவர்கள் ந.க.எண். 32853/2018/குவ3 நாள். 08.05.2019ன் மூலம் பொது அங்கீகாரம் வழங்கப்பட்டு, பொது மக்களிடம் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்கள் கோரி தினசரி நாளிதழில் விளம்பரம் மேற்கொள்ளப்பட்டதற்கும், மேற்படி விளம்பரம் மேற்கொண்ட வகைக்கு, மாலைமலர் நாளிதழிலின் பட்டியல் படி ரூ. 5440/- ஐ நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

தீர்மானம் எண்.155

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..9

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள ஆட்டோ வாகனம் TN 76A 9568க்குரிய தகுதிச் சான்று காலவாதியாகி விட்டதால், தகுதிச் சான்று பெறுவதற்குரிய பழுது பணிகள் (கிளட் பிளேட், ஆக்ஸிலேட்டர் கேபிள், கிளட் கேபிள், எலக்ட்ரிகல் செக்கப், பிரேக் செக்கப், டிங்கரிங் வேலை, வண்டி முழுவதும் பெயிண்டிங் செய்து பெயிண்ட் மூலம் எழுத்து பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 12500/-ஐ வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 156

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..10

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 2288/பி3/2019, நாள். 25.02.2019ன் படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 07.03.2019 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுவதற்கான கொள்கை மற்றும் செயல்திட்டத்தை ஒவ்வொரு நகராட்சியும் தனித்தனியாக தயார் செய்து, நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் ஒப்புதல் பெற்று மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செயல்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல் திட்டம் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2288/பி3/2019, நாள். 26.03.2019ன் படி இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, மேற்படி கொள்கை மற்றும் செயல்திட்டம் அறிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல்த்திட்டத்தினை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை

அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், அதற்கு ஏற்படும் செலவுத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1.நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2288/பி3/2019, நாள். 26.03.2019-ஐ மன்றம் பதிவு செய்யலாம்.

2.இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகள் செயல்படுத்துவதற்கான கொள்கை மற்றும் செயல்திட்ட அறிக்கையை மாவட்ட அரசிதழில் வெளியிடலாம்.

3.அரசிதழில் வெளியிடுவதற்கான செலவு தொகையை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.838/2019/எச்1)

தீர்மானம் எண். 157

பதிவு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..11

செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள ஆழ்குழாய் அடிபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை (உதிரி சாதனங்கள் தவிர்த்து) பழுது நீக்கம் செய்வதற்கு 2019-2020 ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் ரூ. 2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில்
மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 758/2019/இ1)

தீர்மானம் எண். 158

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..12

செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள பிரதான பகிர்மான குழாய்கள்,சுலீஸ் வால்வுகள், ஸ்கவர் வால்வுகள், மற்றும் பொதுக்குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கவும், மேலும் நகர் பகுதியில் உள்ள திறந்த வெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார், சிறுவிசை தண்ணீர்த் தொட்டியில் உள்ள மின் மோட்டார்கள், ஆகியவைகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளை 15 தினங்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்யவும் 2019-2020 ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் ரூ. 4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1 மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில்
மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண். 757/2019/இ1)

தீர்மானம் எண். 159

அனுமதி வழங்கப்பட்டது.